## விகடன் இணையதளம் முடக்கம்!

# பா.ஜ.க. வின் பாசிசத் தன்மைக்கு எடுத்துக்காட்டு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் கண்டனம்!

**சென்னை, பிப். 17 -**

**விகடன் இணையதளத்தில் பிரதமர் மோடி குறித்து கார்ட்டூன் ஒன்றினை வெளியிட்டுள்ளது. இதனை கண்ட ஒன்றிய பா.ஜ.க. அரசு உடனடியாக விகடன் இணையதளத்தை முடக்கி உள்ளது.**

**இச்செய்தி அறிந்ததும் கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கண்டனம் தெரிவித்து சமூக வலைதளப் பதிவில் பதிவிட்டுள்ளார்.**

இந்தியாவில் மோடி தலைமையில் பா.ஜ.க. அரசு பதவியேற்றதிலிருந்தே பத்திரிகையாளர்கள், ஊடகவியலாளர்கள், சமூக ஆர்வலாளர்கள் சுதந்திரமாக தங்கள் கருத்துக்களை பதிவு செய்ய முடியாத அவல நிலை தொடர்ந்து நீடித்து வருகிறது.

அதன்படி நேற்று விகடன் இணையதளம் பிரதமர் மோடியும் அமெரிக்க அதிபர் டிரம்ப் ஆகியோர் சந்திப்பு குறித்து தனது இணைய தளத்தில் கருத்துப்படம் ஒன்றினை வெளியிட்டு இதனை கண்ணுற்ற ஒன்றிய அரசு உடனடியாக விகடன் இணையதளத்தை முடக்கியுள்ளது.

இச்செய்தி அறிந்ததும் முதல்வர் மு.க.ஸ்டாலின் கடும் கண்டனம் தெரிவித்து சமூக வலைதளப் பதிவில் பதிவிட்டுள்ளார்.

இது குறித்து முதல்வர் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:

**இதழியலில் நூறாண்டு காலமாக இயங்கி வரும் விகடனின் இணையத் தளம் முடக்கப்பட்டிருப்பதற்குக் கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.**

**கருத்துகளுக்காக ஊடகங்கள் முடக்கப்படுவது ஜனநாயகத்துக்கு அழகல்ல! பா.ஜ.க.,வின் பாசிசத் தன்மைக்கு இது எடுத்துக்காட்டு ஆகும். முடக்கப்பட்ட இணையத்தளத்துக்கு உடனடி அனுமதி வழங்கக் கேட்டுக் கொள்கிறேன்.**

இவ்வாறு முதல்வர் அவர்கள் தமது சமூக வலைதளப் பதிவிட்டுள்ளார்.

## ‘வாட்ஸ் அப்’பில் வரும் செய்தி!




### மீனவர்கள் கைது செய்யப்படுவதை தடுக்க தவறிய

# ஒன்றிய பா.ஜ.க. அரசை கண்டித்து தி.மு.க. ஆர்ப்பாட்டம்!

## இராமேஸ்வரத்தில் கனிமொழி கருணாநிதி எம்.பி. தலைமையில் ஆயிரக்கணக்கான மீனவர்கள் திரண்டு கண்டன முழக்கம்!

இராமேஸ்வரம், பிப். 17 -

தமிழ்நாட்டு மீனவர்கள் கைது செய்யப்படுவதைத் தடுக்கத் தவறிய ஒன்றிய பா.ஜ.க. அரசை கண்டித்து ராமேஸ்வரத்தில் தி.மு.க. சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

எல்லைத்தாண்டி மீன்பிடித்ததாகக்கூறி தமிழ்நாட்டு மீனவர்களை இலங்கை கடற்படை கைது செய்வது தொடர் கதையாகி வருகிறது. இந்த விவகாரத்தில் நடவடிக்கை எடுக்குமாறு ஒன்றிய அரசுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார்.



ஆனால், தமிழ்நாட்டு மீனவர்கள் மீது தாக்குதல் நடத்தும் இலங்கை அரசை கண்டிக்காமல், மோடி தலைமையிலான ஒன்றிய அரசு வேடிக்கை பார்த்து வருகிறது. இந்நிலையில், ஒன்றிய பா.ஜ.க. அரசின் இந்த செயலை கண்டித்து ராமேஸ்வரத்தில் தி.மு.க. சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. தி.மு.க. துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற தி.மு.க. குழுத்தலை வருமான கனிமொழி கருணாநிதி தலைமையில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் ஆயிரக்கணக்கானோர் பங்கேற்றனர். அப்போது, ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு எதிராக அவர்கள் முழக்கமிட்டனர்.

இதையடுத்து, செய்தியாளர்களிடம் பேசிய நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி, தமிழ்நாட்டில் மும்மொழிக் கொள்கையை திணிக்கும் ஒன்றிய அரசுக்கு கண்டனம் தெரிவித்தார். தமிழ்நாட்டில் இருமொழிக் கொள்கைதான், தொடர்ந்து கடைப்பிடிக்கப்படும் என்று கூறினார்.

இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட செயலாளர் காதர் பாஷா முத்துராம லிங்கம், மாநில மீனவரணி செயலாளர் ஜோசப் ஸ்டாலின், நவாஸ் கனி எம்.பி, சட்டமன்ற உறுப்பினர் முருகேசன் மீனவ சங்க நிர்வாகிகள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

### தமிழ்நாடு மாணவர்களின் கல்வி வளர்ச்சியில்

# மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் செயல்படும் ஒன்றிய அரசு!

## தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் செல்வப் பெருந்தகை கண்டனம்!

சென்னை, பிப். 17 -

தமிழ்நாட்டு மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் மாற்றாந்தாய் மனப்பான்மையோடும் செயல்படும் ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு மக்கள் தகுந்த பாடம் புகட்டுவார்கள் என தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் செல்வப்பெருந்தகை தெரிவித்துள்ளார்.

இது குறித்து செல்வப் பெருந்தகை வெளியிட்டுள்ள சமூகவலைத்தளப் பதிவில், புதிய தேசியக் கல்விக் கொள்கையை ஏற்காததால், தமிழ்நாட்டின் கல்வி வளர்ச்சிக்காக ஒதுக்கிய நிதி 2ஆயிரத்து 152 கோடி ரூபாயை விடுவிக்க முடியாது என்றும்;, அதை ஏற்றுக் கொண்டுதான் ஆக வேண்டும் என்றும் ஒன்றிய அமைச்சர் தர்மேந்திர பிரதான் பேசியிருப்பது ஆணவத்தின் உச்சம் எனத் தெரிவித்துள்ளார். சுதந்திர இந்தியாவில் கூட்டாட்சித் தத்துவத்துக்கு எதிராகவும், தமிழ்நாட்டு மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் மாற்றாந்தாய் மனப்பான்மையோடும் செயல்படும் ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு மக்கள் தகுந்த பாடம் புகட்டுவார்கள் என்றும் அவர் பதிவிட்டுள்ளார்.



# மும்மொழித் திட்டத்தை ஏற்றால்தான் கல்வி நிதி என்பதா?

## ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ கண்டனம்!

சென்னை, பிப். 17 -

மும்மொழி திட்டத்தை ஏற்றால்தான் கல்விக்கான நிதி அளிக்க முடியும் எனக் கூறும் ஒன்றிய அரசுக்கு மதிமுக பொதுச் செயலாளர் வைகோ கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து வைகோ வெளியிட்டுள்ள அறிக்கையில், ஒன்றிய அரசின் ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வித் திட்டத்தின்கீழ் 2 ஆயிரத்து 401 கோடி ரூபாய் நிதியை ஒன்றிய அரசு விடுவிக்காததால் தமிழ்நாடு அரசுக்கு கடும் நெருக்கடி ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார். தேசியக் கல்விக் கொள்கையை ஏற்கும் வரை தமிழ்நாட்டுக்கு நிதி ஒதுக்க முடியாது என்று ஒன்றிய அரசின் கல்வித் துறை அமைச்சர் தர்மேந்திர பிரதான் ஆணவமாக தெரிவித்திருப்பது கண்டனத்துக்குரியது என்றும் அவர் தெரிவித்துள்ளார். ஒன்றிய கல்வித்துறை அமைச்சகம் உடனடியாக தமிழ்நாட்டிற்கு ஒதுக்க வேண்டிய நிதியை விடுவிக்க வேண்டும் என வைகோ கேட்டுக்கொண்டுள்ளார்.



# தருமபுரி மேற்கு மாவட்டம் - காரிமங்கலத்தில் கழகச் செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் முனைவர்.பி.பழனியப்பன் ஆலோசனைகள் வழங்கி பேசினார்!

தருமபுரி, பிப். 17-

கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைப்படி, வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம் அவர்களின் வழிகாட்டுதல்படி தருமபுரி மேற்கு மாவட்டக் கழக செயற்குழுக் கூட்டம் காரிமங்கலம்,மாவட்டக் கழக அலுவலகத்தில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு மாவட்டக் கழக அவைத் தலைவர் கே.மனோகரன் தலைமை வகித்தார்.தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர், மாவட்டக் கழக துணைச் செயலாளர் வழக்கறிஞர் ஆ.மணி முன்னிலை வகித்தார்.

கூட்டத்தில் தருமபுரி மேற்கு மாவட்ட கழக செயலாளர் முனைவர் பி. பழனியப்பன் கழகத் தலைவர் திராவிடநாயகர் அவர்களின் 72 வது பிறந்தநாளை சிறப்பாக கொண்டாடுவது தொடர்பாக விளக்கியும் கழக வளர்ச்சி பணிகள் தொடர்பாக ஆலோசனைகள் வழங்கியும் சிறப்புரை ஆற்றினார்.

கூட்டத்தில் கழகத் தலைவர்தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாள் விழாவை ஒவ்வொரு ஒன்றியத்திற்கு உட்பட்ட அனைத்து ஊராட்சிகளிலும், பேரூராட்சிக்கு உட்பட்ட வார்டுகளிலும் நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்பாக கொண்டாடுவது, 2019 தொடங்கி தொடர்ந்து தேர்தல் களத்தில் வெற்றி வீரராய் விளங்கி கொண்டிருக்கும் கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், அவர்களின் 200 தொகுதிகளின் இலக்கு, அதனை தொடங்கி வைத்த ஈரோடு கிழக்கு, சட்டமன்றத் தொகுதி வாக்காளர்களுக்கும் நன்றி தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றுதல், மற்றும் கழக வளர்ச்சிப்பணிகள், தமிழ்நாட்டை தொடர்ந்து புறக்கணிக்கும் மோடி தலைமையிலான ஒன்றிய அரசைக் கண்டித்து தீர்மானம் மற்றும் தெருமுனைக் கூட்டங்கள் நடத்துவது தொடர்பாக தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டது.

இந்நிகழ்வில் மாநில நிர்வாகிகள் கீரை.விசுவ நாதன், சூடப்பட்டி.சுப்பிரமணி, ராஜேந்திரன்,சத்திய மூர்த்தி, மாவட்ட நிர்வாகிகள் முருகன், பொறியாளர்.சி.கிருஷ்ணகுமார், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஜி.எல்.வெங்கடாசலம், ஒன்றிய kalaga செயலாளர்கள் வழக்கறிஞர்.எம்வீடி கோபால், எஸ்.முனியப்பன், அன்பழகன், கண்ணபெருமாள், செங்கண்ணன், ரத்தின வேல், முத்துக்குமார், பி.எஸ்.சரவணன், சிவபிரகாசம், சக்திவேல், வேடம்மாள், மாது, டாக்டர்.பிரபு ராஜசேகர், பேரூர் கழக செயலாளர்கள் முல்லைரவி, பி.கே.முரளி, மோகன், கு.கௌதமன் கொ.ஜெயசந்திரன், கே.வி. கே.வெங்கடேசன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், பி.சி.ஆர்.மனோகரன், சென்னகிருஷ்ணன், பொதுக்குழு உறுப்பினர்கள், கலைவாணி, குட்டி. மோகன், முத்துஜா,மற்றும் சார்பு அணிகளின் மாவட்ட அமைப்பாளர். கலந்து கொண்டனர்.

### கழக சட்டதிட்ட விதி : 26 – பிரிவு :1ன்படி

# தி.மு.கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் நியமனம்!

## தலைமைக் கழக அறிவிப்பு!

**கழக சட்டதிட்ட விதி: 26 பிரிவு 1ன்படி ஏற்கனவே உயர்நிலை செயல்திட்டக்குழுவில் இடம் பெற்றுள்ள உறுப்பினர்களுடன் திரு.பா.மு.முபாரக்** (எண். 71-74, எஸ்.ஏ.பி. இல்லம், பரசுராமன் தெரு, கிருஷ்ணாபுரம், குன்னூர், நீலகிரி - 643102.) **அவர்கள் தலைமைக் கழகத்தால் நியமிக்கப்படுகிறார்.**

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 600 018.
நாள் : 15.02.2025.

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

### தலைமை: தொண்டாமுத்தூர் அ.ரவி, வரவேற்புரை: ஆர்.பரமேஸ்வரன், ஒருங்கிணைப்பாளர்: விக்கி (எ) பா.விக்னேஷ்குமார்!

# கோவை வடக்கு மாவட்ட இளைஞர் அணி சார்பில் உதயநிதி அகாடமி திறப்பு விழா!

### ஆ.இராசா எம்.பி. - அமைச்சர் வி.செந்தில் பாலாஜி - கே.இ.பிரகாஷ் எம்.பி. - மேயர் ந.தினேஷ்குமார்- டாக்டர். கோகுல் கிருபா சங்கர் பங்கேற்பு!’

கோவை, பிப்.17 -

கோவை வடக்கு மாவட்ட இளைஞர் அணி சார்பில் உதயநிதி அகாடமி திறப்பு விழா நாளை (17.02. 2025 திங்கட்கிழமை) அன்னூர் அம்மணி அருணா காம்ப்ளக்ஸ் வளாகத்தில் பகல் 12.00 மணியளவில் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் விக்கி (எ) பா.விக்னேஷ்குமார் ஒருங்கிணைப்பில் கோவை வடக்கு மாவட்டச் செயலாளர் தொண்டாமுத்தூர் அ. ரவி தலைமையில் அன்னூர் பேரூர் கழகச் செயலாளர் ஆர்.பரமேஸ்வரன் வரவேற்புரையில் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் எம்.ஏ.ஆர்.கே.ஹக்கீம், அன்னூர் வடக்கு ஒன்றியச் செயலாளர் நா.பழனிச்சாமி, அன்னூர் தெற்கு ஒன்றியச் செயலாளர் மு.தனபாலன், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் க.நாகராஜ், பி.கே.அருணாச்சலம், வே.சூரியன்தம்பி, உதயநிதி பாபு, எம்.மனோஜ் ஆகியோர் முன்னிலையில் நடைபெறவுள்ளது.

கழக துணை பொதுச் செயலாளர், ஆ.இராசா எம்.பி. அகாடமியை திறந்து வைத்து சிறப்புரையாற்று கிறார்.

இந்நிகழ்ச்சியில் மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் வி.செந்தில் பாலாஜி, கழக இளைஞர் அணி துணை செயலாளர், ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், திருப்பூர் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர், மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார், அவினாசி சட்டமன்ற தொகுதி பார்வையாளர் டாக்டர் கோகுல் கிருபா சங்கர் ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

இதில் மாநில விவசாய தொழிலாளர் அணி இணைச் செயலாளர் சி.ஆர். இராமச்சந்திரன் உள்பட மற்றும் பலர் கலந்து கொள்கின்றனர்.



கழகத்தலைவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு, கழக விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பில் கழக அணிகள் உட்பட 20 அணிகள் பங்கேற்ற மாபெரும் கிரிக்கெட் போட்டி சென்னை சேப்பாக்கம் மெரினா மைதானத்தில் நடைபெற்ற போட்டியினை கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் இராணிப்பேட்டை ஆர். காந்தி கலந்து கொண்டு வெற்றி பெற்ற அணியினருக்கு, வெற்றி கோப்பைகள் வழங்கி வாழ்த்தினார். இதில் பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, தொழில் துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா , மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் மாநில விளையாட்டு மேம்பாட்டு அணி செயலாளர் தயாநிதி மாறன், ஆகியோர் உடனிருந்தனர்.

